**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 10/2024**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-2 |
| Name | : | Mr. Nandagopal |
| Father Name | : | Palanisamy |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 45 |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2024.

1,2 எதிகள் ஆஜர் 3 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. ஆஜர் இன்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் திருப்பூர் வஞ்சிபாளையத்தில் குடியிருந்து முடிதிருத்தும் வேலை செய்துவருகிறேன். 27.05.2022– அன்று மாலை 4– 4.15 மணியளவில் நான் வீட்டில் இருக்கும்போது எங்கள் வீட்டிற்கு பின்புறம் பழைய பார்வதி ரைஸ்மில் அருகே சத்தம் கேட்டு அங்கு சென்று பார்க்கும்போது 5 பேர் நின்றுகொண்டிருந்தார்கள். அங்கு வெட்டப்பட்ட நிலையில் ஒரு பையன் சாதம் உசைன் என்பவர் கீழே கிடந்தார். நான் அங்கு சென்ற சமயத்தில் அந்த 5 பேர் அங்கு இருந்து ஓடினார்கள். நான் அவரை

விசாரிக்க தன்னை  ராஜா மற்றும் சிலர் தன்னை வெட்டிவிட்டதாக சொன்னார். மக்கள் கூட்டம் சேர்ந்தது. ஆம்புலன்ஸ் மற்றும் போலீசார் வந்தனார். 5 நபர்களின் 2 நபர்கள் நீதிமன்றத்தில் உள்ளனர். அவர்கள் சாட்சி அடையாளம் காண்பித்தார். 3 ம் எதிரி உதயகுமார், 4ம் எதிரி ரியாஸ், 5ம் எதிரி அப்துல் ஜாமாத் நீதிமன்றத்தில் ஆஜாரில் இல்லை. அவர்களின் ஆஜாரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்று க்கொள்ளப்பட்டது. போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்  குறுக்கு விசாரணை :– இல்லை,**</u>

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2024.08.06 10:16:53 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி(FAC),
திருப்பூர்.

**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 10/2024**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-3 |
| Name | : | Mr.Tamilselvan |
| Father Name | : | Rayappagounder |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 40 |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2024.

1,2 எதிகள் ஆஜர் 3 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. ஆஜர் இன்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் திருப்பூர் வஞ்சிபாளையத்தில் குடியிருந்து Grill workshop வைத்து நடத்தி வருகிறேன். 27.05.2022 – அன்று மாலை 4.15 மணியளவில் எங்கள் தோட்டத்திற்கு அருகே பார்வதி ரைஸ் மில் உள்ளது. அது பாழடைந்து உள்ளது. அங்கு ச த்தம் கேட்டு நான் அங்கு சென்று பார்க்க நந்தகுமார் (PW2 ) ஓடிவந்தார். நாங்கள் சென்று பார்க்க ஒரு பையன் வெட்டுப்பட்டு கிடந்தான். எங்கள் சத்தத்தைக் கேட்டு 5 நபர்கள் அங்கு

இருந்து ஓடினார்கள். அந்த பையனுக்கு தலையில் வெட்டுபட்டு இரத்தம் வந்து கொண்டிருந்தது. அவரது பெயரை கேட்ட சமயம் தனது பெயர் சாதம் உசைன் என்று சொன்னார். அந்த பையனும் அவரது நண்பர்களும் மது அருந்துவதற்காக ரைஸ் மில்லுக்கு வந்ததாகவும், தன்னிடம் மேற்படி நபர்கள் பணம் வாங்கி இருந்ததாகவும் அது சம்மந்தமாக அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு தன்னை முகமது காஜா, உசைன் மேலும் 2 நபர்களின் பெயரை சொன்னார் அவர்களது தற்போது எனக்கு தெரியவில்லை. அவர்கள் தன்னை வெட்டியதாக சொன்னார். அருகில் இருந்த ஊர்காரர்கள் அங்கு வந்தார்கள். ஆம்புலன்ஸ் அங்கு வந்தது. வெட்டு பட்ட பையனை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தனர். நான் அங்கு செல்வதற்கு முன்பே 5 நபர்கள் ஓடிவிட்டதால் அவர்கள் என்னால் அடையாளம் சொல்ல இயலவில்லை.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை** இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2024.08.06 10:17:16 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி(FAC),
திருப்பூர்.